



சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத்துறை வளாகக் கூட்டரங்கில், நேற்று முன்தினம் (19.06.2025) வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி தலைமையில் 2025ஆம் ஆண்டு மே மாதத்திற்கான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரித்துறை ஆணையர் முனைவர் டி. ஜகந்நாதன், இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி. மொ.நா. பூங்கொடி மற்றும் வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### சா.ஞானதிரவியம் தலைமையில் –

# நெல்லை கிழக்கு மாவட்ட அவசர செயற்குழுக் கூட்டம்!

### இரா.ஆவுடையப்பன் ஆலோசனை வழங்கினார்!

நெல்லை.ஜுன்.21.

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க அவசர செயற்குழு கூட்டம் நெல்லை கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் சா. ஞான திரவியம் தலைமையில் இராதாபுரம் தொகுதி பார்வையாளர் சிவராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், எஸ்.ஏ.கே.சித்திக்,மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம்,மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாவட்ட பொருளாளர் ஜார்ஜ் கோசல், மாவட்ட துணை செயலாளர்கள் நம்பி,மைக்கேல், தமயந்தி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கியும், மதுரையில் நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தின் தீர்மானங்கள் பற்றி விளக்கி கூறியும்,”ஓரணியில் தமிழ் நாடு”என்ற தலைப்பின் கீழ் கழகத் தலைவர் அன்புத்தளபதியார் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஜுன் 20-06-2025 முதல் 31-06-2025 வரை ஒரு வாக்கு சாவடிக்கு 30 சதவீதம் என்ற அடிப்படையில் ஏற்கனவே கழகத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் மற்றும் புதிய உறுப்பினர்கள் என அனைவரையும் உறுப்பினராக சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து ஒன்றிய, நகர, பேரூர், செயலாளர்கள் அனைவருக்கும் புதிய உறுப்பினர் சேர்க்கை படிவம் வழங்கப்பட்டது.

நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர்கள் ராமசந்திரன், கா.அபூபக்கர்,சாந்தி சுபாஷ், ஒன்றிய செயலாளர்கள் சிவனு பாண்டியன் (எ) பரணி சேகர், முத்து பாண்டி (எ) பிரபு, முத்துகிருஷ்ணன், சுடலைக் கண்ணு, ராஜன், செல்வகருணாநிதி,கண்ணன்,

போர்வெல் கணேசன்,சுபாஷ் சந்திரபோஸ், சேவியர்ராஜா,எரீக் ஜீடு,

நகர செயலாளர்கள் கணேசன், சுப்பிர மணியன் (எ) மணிசூரியன், பேரூர் செயலாளர்கள் சுப்பையா, மணிஷா செல்வராஜ், மணிகண்டன், டி.வானுவா மலை, சிந்தா மதார், முருகையா பாண்டியன்,கசமுத்து, ஜான்கென்னடி, சேதுராமலிங்கம், அயூப் கான்,அணி அமைப்பாளர்கள் ஜான்ரபீந்தர், ஜெ.செல்வசூடாமணி, எஸ்.பிரேம்ஆனந்த்,இ. மாடசாமி, நெடுஞ்செழியன், பீர்முகம்மது, பிரகாஷ், கார்த்திக்குமார், திருப்பதி ஜெயசீலன், ராஜா சங்கரலிங்கம், முருகன், அன்வர் உசேன், கேசவன், சகாயபிரபு, நா.முருகன், அணி துணை அமைப்பாளர்கள் ஆகாஷ், தில்லை ராஜா, அருள் ராஜ் டார்வின், மனோஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புதிய உறுப்பினர்கள் சேர்க்கை படிவத்தை பெற்றுக் கொண்ட கழக நிர்வாகிகள் புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினர்.

### செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தில் –

# பழங்குடியினருக்கு ஆதார் - குடும்ப அட்டை - சாதிச்சான்று வழங்கும் சிறப்பு முகாம்!

### மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஜுன். 21-

செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பழங்குடியினர் மக்களுக்கு ஆதார் அட்டை குடும்ப அட்டை, சாதி சான்று வழங்கும் சிறப்பு முகாமை செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டத்தில் உள்ள பழங்குடி மக்களுக்கு ஆதார் அட்டை, குடும்ப அட்டை, சாதிச் சான்று, குடியிருப்பு சான்று, ஜன்தன் வங்கி கணக்கு, சமூக பாதுகாப்பு திட்டத்தில் அரசு நலத்திட்டங்கள் பெறுவதற்கும்,மத்திய மாநில அரசு திட்டங்களில் பயன் பெறும் வகையில் சிறப்பு முகாம் செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்குசெஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் முன்னிலை வகித்தார்.செஞ்சி ஆதிதிராவிடர் நலத்துறை தனி வட்டாட்சியர் புஷ்பாவதி அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டுஅழிவின் விளிம்பில் உள்ள பழங்குடியின இருளர் மக்களுக்கு ஆதார் அட்டை ,குடும்ப அட்டை ,சாதி சான்றுபெறுவதற்கான முகாமை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றி பழங்குடியின மக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார் .

முகாமில் நூற்றுக்கு மேற்பட்ட பழங்குடியின மக்கள் கலந்து கொண்டர்.

இதில் மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன்,துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பழனி, சசிகலா,முதுநிலை வருவாய் ஆய்வாளர்கள் பரமசிவம், குமார், ரங்கநாதன் ,மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரசன்னா, மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் சிவப்பிரகாசம்,மலையரசன். நிர்வாகிகள் வாசு, ஆறுமுகம், அய்யாதுரை, சீனுவாசன், சத்யா கார்த்திகேயன், தொண்டரணி பாஷா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் புதிதாகத் தொடங்க உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியினை காணொலிக் காட்சி வாயிலாக நேற்று (20.06.2025) வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார், அதனைத் தொடர்ந்து உளுந்தூர்பேட்டையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமையில், உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் ஆகியோர் கலந்து கொண்டு புதிய கல்லூரியை துவக்கி வைத்தனர், இந்நிகழ்வில் அரசு அதிகாரிகள், துறை சார்ந்த அலுவலர்கள், கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட,ஒன்றிய, நகர,பேரூர்,கிளைக் கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்ட முன்னாள் அவைத் தலைவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மா.பா.சாரதி அவர்களின் 49வது நினைவு தினத்தை முன்னிட்டு அவரின் திருவுருவப் படத்திற்கு மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார் . இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.பா.அன்புநிதி, ஒன்றிய கழக செயலாளர்கள் சி.எல்.ஞானசேகரன், சீதாராமன், என்.இ.சத்யானந்தம், முருகேசன், கே.ஜனார்த்தனன், எம்.டேவிட், பகுதி செயலாளர்கள் எஸ்.தயாள் ராஜ்,பி.முருகபெருமாள், மாவட்ட துணை செயலாளர் ஜி.எஸ்.அரசு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.ராஜமார்த்தாண்டன், கொணவட்டம் வட்டகழக செயலாளர் ஆனந்தகுமார் மற்றும் நகர ,பகுதி ,பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





## தி.மு.க.

## இளைஞர் அணி

### முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டி.சி.ஆர்.எம். தினேஷ்ராஜன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், கட்டமைப்புகளின் நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 21.06.2025 | ஊத்தங்கரை மத்திய ஒன்றியம் | பாவக்கல் | பசும்பொன் ரவிச்சந்திரன் சே.ஆனந்த சைனி |
| 2 | | நாகரசம்பட்டி பேரூர் ஒன்றியம் | என்.தட்டக்கல் | சேலம் சுஜாதா எஸ்.பவித்ரா |
| 3 | 22.06.2025 | போச்சம்பள்ளி ஒன்றியம் | மகாதேவன கொள்ளஅள்ளி, அனக்கொடி | அப்துல் ரகுமான் பாரி எஸ்.பவித்ரா |
| 4 | | கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றியம் | பையனப்பள்ளி | கனல் சுப்பிரமணி வே.ஆனந்த சைனி |
| 5 | 23.06.2025 | மத்தூர் தெற்கு ஒன்றியம் | கெரிகப்பள்ளி | ஜான் சுந்தர்ராஜ் வே.சீனிவாசன் |
| 6 | | பர்கூர் தெற்கு ஒன்றியம் | கொத்தபள்ளி, ஐங்குந்தம் | லயோலா ராஜசேகர் கு.முரளிகிருஷ்ணன் |
| 7 | | கிருஷ்ணகிரி மேற்கு ஒன்றியம் | பாஞ்சாலியூர், வெங்கடாபுரம் | செந்தாமரைக்கண்ணன் எஸ்.பவித்ரா |
| 8 | 24.06.2025 | மத்தூர் வடக்கு ஒன்றியம் | மலையாண்டஹள்ளி | லயோலா ராஜசேகர் ர.ராஜேஷ் |
| 9 | | காவேரிப்பட்டணம் கிழக்கு ஒன்றியம் | நெடுங்கல் | கனல் சுப்பிரமணி வே.சீனிவாசன் |
| 10 | | கிருஷ்ணகிரி மேற்கு நகரம் | சென்ட்ரல் தியேட்டர், லண்டன்பேட்டை. | அப்துல் ரகுமான் பாரி சே.ஆனந்த சைனி |
| 11 | 25.06.2025 | பர்கூர் பேரூர் | எம்.ஜி.ஆர். நகர் | பையூர் இளையராஜா சி.பவித்ரா |
| 12 | | காவேரிப்பட்டணம் மேற்கு ஒன்றியம் | வெங்கடாபுரம், பாஞ்சாலியூர். | தருமபுரி அதியமான் கு.முரளிகிருஷ்ணன் |
| 13 | 26.06.2025 | காவேரிப்பட்டணம் பேரூர் | பேருந்து நிலையம், காவேரிப்பட்டணம் | லயோலா ராஜசேகர் ர.ராஜேஷ் |
| 14 | | கிருஷ்ணகிரி கிழக்கு நகரம் | பாரதிதாசன் தெரு, 29.வது வார்டு, கிருஷ்ணகிரி. | கந்திலி கரிகாலன் எஸ்.பவித்ரா |

கிருஷ்ணகிரி

நாள் : 19-06-2025

கலைஞர் 100 1924 - 2023





விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பழங்குடியினர் மக்களுக்குஆதார் அட்டை குடும்ப அட்டை, சாதிச் சான்று வழங்கும் சிறப்பு முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ தொடங்கி வைத்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன்,செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன்,செஞ்சி ஆதிதிராவிடர் நலத்துறை தனி வட்டாட்சியர் புஷ்பாவதி உள்ளிட்டோர் உள்ளனர்.